இருவர் . நல்ல மண்வளம் உண்டு நீர் வளம் உண்டு பொன் விளையும் பூமி
ஆழ ஆழியும் உண்டு ஆள்பலம் உண்டு வேர்வை சிந்தவா நீ

ஆண் . செந்நெல் விளைகின்ற பூமியும் உண்டு இங்கும் அங்கும் என வாவிகள் உண்டு
பெண் . செந்நெல் விளைகின்ற பூமியும் உண்டு இங்கும் அங்கும் என வாவிகள் உண்டு
ஆண் . ஏர்களும் உண்டு காளைகள் உண்டு வேர்வை சிந்தவா நீ

ஆண் . பெரும் மீன்வளம் உண்டு தோணிகள் உண்டு வலை கொண்டுவா நீ
தினம் பட்டினி என்கின்ற துன்பங்கள் வேண்டாம் பஞ்சம் தீர்க்கவா நீ
பெண். பெரும் மீன்வளம் உண்டு தோணிகள் உண்டு வலை கொண்டுவா நீ
தினம் பட்டினி என்கின்ற துன்பங்கள் வேண்டாம் பஞ்சம் தீர்க்கவா நீ
ஆண் . இந்த வானமும் பூமியும் தான் எங்கள் வாழ்கையின் சொர்க்கங்களே
பெண் . இந்த வானமும் பூமியும் தான் எங்கள் வாழ்கையின் சொர்க்கங்களே
ஆண் . இந்த காலங்கள் எங்களின் கைகளில் உண்டு வேர்வை சிந்தவா நீ
பெண் . நன்றாய் வேர்வை சிந்தவா நீ

நல்ல மண்வளம் உண்டு நீர் வளம் உண்டு பொன் விளையும் பூமி
ஆழ ஆழியும் உண்டு ஆள்பலம் உண்டு வேர்வை சிந்தவா நீ

ஆண் . இன்று செல்லடி கேட்கும் குண்டுகள் வீழும் யுத்த கள பூமி
அதை காதினில் கேட்டு தாளங்கள் போட்டு போர்பரணி பாடி
பெண் . இன்று செல்லடி கேட்கும் குண்டுகள் வீழும் யுத்த கள பூமி
அதை காதினில் கேட்டு தாளங்கள் போட்டு போர்பரணி பாடி
ஆண் . ஈழ தேசம் மீட்கும் போரில் எங்கள் செல்வங்கள் சேர்ந்தாச்சு
பேண் . ஈழ தேசம் மீட்கும் போரில் எங்கள் செல்வங்கள் சேர்ந்தாச்சு
ஆண் . இந்த காலங்கள் எங்களின் கைகளில் உண்டு வேர்வை சிந்தவா நீ
பெண் . நன்றாய் வேர்வை சிந்தவா நீ

நல்ல மண்வளம் உண்டு நீர் வளம் உண்டு பொன் விளையும் பூமி
ஆழ ஆழியும் உண்டு ஆள்பலம் உண்டு வேர்வை சிந்தவா நீ